**O.S.No.466/2012**

**Date:09.10.2018**

**வாதி தரப்பு சாட்சி 1 - பொன்னுச்சாமி, த-பெ.முத்து**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை**

தாவாச் சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்றால் ராஜாக்கூரில் உள்ளது. தாவாச் சொத்து தற்போது என்னவாக உள்ளது என்றால் வயலாக உள்ளது. அரசு ஆவணங்களில் என்னவாக வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றால் வயலாகத்தான் உள்ளது. எத்தனை சர்வே எண்ணாக உள்ளது என்றால் மூன்று சர்வே எண் என்று நினைக்கிறேன். அதன் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 10 ஏக்கர் 50 செண்டு என்று நினைக்கிறேன். அந்த 10 ஏக்கர் 50 செண்டுக்கு ஊடே பொதுப்பணித்துறைக்கு பாத்தியப்பட்ட வாய்க்கால் செல்கிறது என்றால் இல்லை. பொதுப்பணித்துறை அதிகாரிகளை சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வாய்க்கால் தோன்ற வந்தார்கள், அதனால் அதை தடுத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 10 ஏக்கருக்கும் கீழாக 450 ஏக்கர் பாசனம் உள்ளது என்றால் பாசனம் எதுவும் இல்லை. பொதுப்பணித்துறை வாய்க்காலை மறித்து நான் பிளாட்டாக போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனவேதான் செயற்பொறியாளர், உதவிப் பொறியாளர் ஆகியோர் வாய்க்காலை எடுப்பதற்காக வந்தார்கள்ள ன்றால் சரியல்ல. எனவேதான் நான் அவர்களை தரப்பினர்களாக சேர்த்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான வாய்க்கால் உள்ளது என்றால் சரியல்ல. தற்போது இந்த பத்தரை ஏக்கரும் பிளாடடுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் இல்லை, வயல்களாக உள்ளது. வாய்க்காலை நான் மறித்ததால்தான், இந்த வழக்கில் பொதுப்பணித்துறை அதிகாரிகளை சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், எனவே நான் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.